1978 மார்ச் 15]

பவும் திருச்சி, விழுப்புரம் வழியாக சென்னைக்கு விடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு திருச்சியிலிருந்து கோயம்புத்தூருக்குச் செல்ல இரவு 11 மணிக்குக் கூட்டம் அதிகம் இருப்பதால், புதுக்கோட்டையிலே இருந்து திருச்சி வழியாக, கோயம்புத்தூருக்கு ஒரு பஸ் விடப்படுமா? இதுபற்றி அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை இன்னும் சிறிது நேரம் நீட்டிக்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவரவர்களே, சென்னையிலிருந்து இராமேஸ்வரத்திற்கு இரண்டு பேருந்துகள் செல்லுகின்ற காரணத்தால் அங்கு புதிதாக வேறு பஸ் விடுவது தேவையில்லை. புதுக்கோட்டையிலிருந்து சென்னைக்குப் போதிய பயணிகள் கிடைக்காத காரணத்தால்தான் அது நிறுத்தப்பட்டிருந்தது. கட்டணம் உயர்ந்தது காரணம் அல்ல. இருப்பினும் கட்டணம் குறைந்திருக்கின்ற இந்த நேரத்தில் புதுக்கோட்டையிலிருந்து சென்னைக்கு மீண்டும் ஒரு பஸ் விடுமாறு போக்குவரத்துக் கழகத்திற்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. அது போன்றே புதுக்கோட்டையிலிருந்து கோவைக்கும் பஸ் விடுவது பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. த. புஸ்பராஜு : பேரவைத் தலைவரவர்களே, இரவு 4 ஆம்னி பஸ்கள் விடப்பட்டும் இடம் கிடைக்காத காரணத்தால் இந்தப் புதிதாக விடக்கூடிய பேருந்தை புதுக்கோட்டையிலிருந்து சென்னைக்கு விடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே கூறியபடி கட்டண உயர்வு குறைவாக இருக்கும் இந்நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோசனையைக் கருத்தில் கொண்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினாக்கள், விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

(2) ஒழுங்குப் பிரச்சனைகள்.

(அ) எஸ். எஸ். எல். சி. தேர்வு வினாத் தாள்கள் மாற்றிக் கொடுக்கப்பட்டது குறித்து.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, மிக அவசியமும் பொது முக்கியத்துவமும் வாய்ந்த பொது மக்களைப் பாதிக்கக் கூடிய ஒரு பிரச்சனையைக் கிளப்புகிறேன்..... இது ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர்..... குறுக்கீடு......

[திரு துரை முருகன்] [1978 மார்ச் 15

காலைப் பத்திரிகையிலே மிகப் பரபரப்பூட்டக்கூடிய அளவில் இன்றைக்குச் செய்தி வந்திருக்கிறது. எஸ். எஸ். எல். சி. பரீட்சைக்குரிய கேள்வித்தாளே அதாவது பிரைவேட் ஸ்டூடன்ட்ஸுக்கு கொடுக்க வேண்டியதை ரெகுலர் ஸ்டூடன்ட்ஸுக்கும் ரெகுலர் ஸ்டூடன்ட்ஸுக்குக் கொடுக்க வேண்டியதை பிரைவேட் ஸ்டூடன்ட்ஸுக்கும் மாற்றிக் கொடுத்திருக்கிறார்கள். எம். சி. டி. பெண்கள் உயர்நிலைப்பள்ளி, இந்து உயர்நிலைப் பள்ளி, வேப்பேரியில் உள்ள புனித பால் உயர்நிலைப்பள்ளி மற்றும் கள்ளக்குறிச்சியில் ஒரு நகராட்சிப்பள்ளி ஆகிய இடங்களில் இவ்வாறு நடைபெற்றிருக்கிறது. இது மாணவர்கள் மத்தியிலும், பெற்றோர்கள் மத்தியிலும் பீதியையும் பரபரப்பையும் ஏற்படுத்தி இருக்கிறது. இதுபற்றி அமைச்சர் விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் எல்லாம் தெரிந்தவர். இவ்வாறு பிரச்சனையைக் கிளப்புவது சரியல்ல. அவர் முன்பே என்னிடம் இதுகுறித்து எழுதிக் கொடுத்திருக்க வேண்டும். இது எழுத்து மூலமாகத் தர வேண்டிய விஷயம். திடீரென பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்று ஆரம்பிப்பது சரியல்ல. இது சபையின் நேரத்தை வீணுக்குவது போல் இருக்கிறது. ஆகையால் இதனை முன்பே எழுத்து மூலமாகத் தந்திருக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இன்று மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் அவர்களுக்கு ஏற்பட்ட பீதியும் பரபரப்பும் நாட்டிலே யாருக்கும் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இருப்பினும் இவ்வாறு கேள்வித்தாள் மாறுவதற்கு காரணமாய் இருந்த தலைமையாசிரியர்மீது அரசு நடவடிக்கை எடுக்கும். இதனுல் மாணவர்கள் பாதிக்கப்படாமல் பாதுகாப்புத் தருவோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(3) தகவல் கோரல்.

அ) கள்ளக்குறிச்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் வினுத்தாள்கள் மாற்றப்பட்டது குறித்து.

திரு. துரை முத்துசாமி: பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். எங்கள் தென் ஆற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் இதேவிதமாக பேப்பர் மாற்றப்பட்டு அவர்கள் தேர்வு எழுதாமல் புறக்கணித்து விட்டார்கள். அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்பர்மேஷன் கேட்பதற்கு இது நேரம் அல்ல.